கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 03.12.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "பயிர் மேம்படுத்தலுக்கான மூலக்கூறு இனப்பெருக்கம்" செய்முறைப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் "பயிர் மேம்படுத்தலுக்கான மூலக்கூறு இனப்பெருக்கம்" என்ற இரண்டு நாள் செய்முறைப் பயிற்சியை தற்போது தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் வளாகத்திலுள்ள உயிரி தொழில்நுட்பத் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தில் (CPMB&B) நடைபெற்று வருகிறது. இந்தப் பயிற்சி 2025 டிசம்பர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு, கேரளா மற்றும் டெல்லி மாநிலங்களைச் சேர்ந்த 26 பயிற்சி பெறுபவர்கள், SRM பல்கலைக்கழகம், கருண்யா பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், காலிகட் பல்கலைக்கழகம், டெல்லி பல்கலைக்கழகம் மற்றும் TNAU ஆகியவற்றின் முதுநிலை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் எனப் பல்வேறு நிறுவனங்களிலிருந்து கலந்து கொள்கிறார்கள்.

பயிற்சி நிகழ்ச்சியை CPMB&B இயக்குநர் முனைவர் என்.செந்தில் அவர்கள் துவக்கி வைத்தார். உயிரி தொழில்நுட்பத் துறைத் தலைவர் முனைவர் ஈ. கோகிலதேவி அவர்கள் வரவேற்புரையை வழங்கினார். சிறப்பு உரையை முனைவர் கே. வெங்கடேசன் முதன்மையர் (தோட்டக்கலை), அவர்கள் வழங்கினார். இந்தப் பயிற்சி, மூலக்கூறு குறியீடுகள் (Molecular Markers) மற்றும் அவை பயிர் இனப்பெருக்கத்தில் பயன்படும் முறைகள் குறித்த அடிப்படை அறிவினை வழங்குவதோடு, நிபுணர் பேராசிரியர்கள் நடத்தும் விரிவுரைகள் மற்றும் செய்முறை அமர்வுகள் மூலம் பயிற்சி பெறுபவர்களுக்கு முழுமையான கற்றலை வழங்குகிறது. பங்கேற்பாளர்கள் PCR தொழில்நுட்பம் மற்றும் குறியீடு உதவியுடன் செய்யும் இனப்பெருக்கம் (MAS) ஆகியவற்றில் நேரடி அனுபவம் பெறுகின்றனர். இந்த இரண்டு நாள் பயிற்சி, பயிற்சி பெறுபவர்களின் மரபணு–அடிப்படையிலான பயிர் இனப்பெருக்க திறன்களை வலுப்படுத்தி, பயிர் மேம்பாட்டில் ஜெனோமிக்ஸ் கருவிகளைப் பயன்படுத்தும் திறனை மேம்படுத்துகிறது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சி மரபணு தொழில்நுட்பத் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் எஸ்.கீதாஞ்சலி அவர்களால் ஒருங்கிணைக்கப்படுகிறது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**